# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## முதலாம் தவணை மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 11 | சைவசமயம் | நேரம்: 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

**பகுதி - I**

❖ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. செயலில் உள்ள தடைகளை நீக்கி சித்தி தருபவர்
    1) முருகன் 2) விநாயகர் 3) சிவபெருமான் 4) ஆஞ்சநேயர்

02. சைவசமயிகளின் முதல் நூல்கள்
    1) புராண இதிகாசங்கள் 2) தேவார திருமுறைகள்
    3) வேதஆகமம் 4) மெய்கண்ட சாஸ்திர நூல்கள்

03. நாம அர்ச்சனைக்கு வித்திட்ட வேதம்
    1) யசூர் வேதம் 2) இருக்கு வேதம் 3) சாமவேதம் 4) அதர்வண வேதம்

04. ஆலய தேர் அமைக்கும் முறை பற்றிக்கூறும் நூல்
    1) ஆகமம் 2) மானசாரம் 3) மனையடி சாஸ்திரம் 4) புராணங்கள்

05. மெய்கண்ட தேவரின் நூல்
    1) சிவஞானபோதம் 2) உண்மை விளக்கம் 3) சிவஞானசித்தியார் 4) உண்மைநெறிவிளக்கம்

06. இறைவனின் சிறப்பு இலக்கணம்
    1) தடத்தநிலை 2) பரமநிலை 3) சொரூபநிலை 4) வியாபகநிலை

07. ஆன்மாக்கள் செய்த வினைகளின் கூட்டம்
    1) சஞ்சிதம் 2) பிரார்த்தம் 3) ஆகாமியம் 4) நல்வினை

08. பிரபஞ்ச இயக்கத்திற்கு நிமித்த காரணம்
    1) மாயை 2) இறைவன் 3) சக்தி 4) கன்மம்

09. திருவருட்பயனில் உள்ள பாடல்கள்
    1) 10 2) 100 3) 1100 4) 5

10. பிரளையாகலருக்குரிய மலங்கள்
    1) கன்மம், மாயை 2) ஆணவம், மாயை 3) ஆணவம், கன்மம் 4) மாயை, கன்மம்

11. தமிழில் இராமாயணம் பாடியவர்
    1) வில்லிபுத்தூர் ஆழ்வார் 2) கம்பர் 3) வியாசர் 4) சங்கரர்

12. மிக உயரமான கொடிமரத்தினை உடைய சிவாலயம்
    1) கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீச்சரம் 2) பொன்னம்பலவானேச்சரம்
    3) ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரம் 4) திருக்கோணேச்சரம்

13. இலக்கண சுந்தரியை விநாயகர் சஷ்டி விரதம் அனுட்டிக்க வழிபடுத்தியவர்
    1) கௌதம முனிவர் 2) ஔவையார் 3) வியாசர் 4) விநாயகர்

14. சைவவித்தியா விருத்திச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
    1) 1923 2) 1823 3) 1293 4) 1328

15. அன்பாகிய தவத்தின் மூலம் இன்பத்தைப் பெறலாம் எனக் கூறியவர்
1) விபுலானந்தர் 2) விவேகானந்தர் 3) சுப்பிரமணிய பாரதியார் 4) ஆறுமுகநாவலர்

16. சமூகத்தின் தேவை அறிந்து செய்யும் அறச்செயல்
1) ஈகை 2) ஒப்புரவு 3) வாய்மை 4) பொறுமை

17. சந்திரன் ஒவ்வொரு நட்டத்திரத்தையும் கடக்க எடுக்கும் காலம்
1) கரணம் 2) திதி 3) வாரம் 4) யோகம்

18. "குலப்பண்டிகை" எனச் சிறப்பிக்கும் சக்தி விரதம்
1) கேதாரகௌரி 2) வரலட்சுமி விரதம் 3) நவராத்திரி 4) ஆடிச்செவ்வாய்

19. "நெக்குள் ஆர்வம் மிகப் பெருகி" என்ன பதிகம் பாடியவர்
1) சம்பந்தர் 2) ஔவையார் 3) நாவுக்கரசர் 4) சுந்தரர்

20. உயிர்களின் மும்மலங்களை நீக்குவதால் விபூதிக்கு வழங்கும் பெயர்
1) பசிதம் 2) பஸ்மம் 3) ஷாரம் 4) இரட்சை

21. ஒவ்வொரு மாதமும் ஒருவர் இறந்த திதியில் செய்யப்படுவது
1) திவசம் 2) மாசிகம் 3) சிரார்த்தம் 4) அந்தியேட்டி

22. தனு, கரண, புவன போகங்களில் கரணம் குறிப்பது
1) உயிர்கள் அனுபவிக்கின்ற இன்பதுன்பங்கள்
2) உயிர்கள் உறைகின்ற உடல்
3) உயிர்கள் அறிவைப் பெறுவதற்கான கருவி
4) உடலோடு கூடிய உயிர்கள் உலாவுகின்ற உலகம்

23. சனி பகவானால் பீடிக்கப்படாதவர்கள்
1) முருகன், சிவன் 2) விநாயகர், முருகன் 3) பிள்ளையார், ஆஞ்சநேயர் 4) சிவன், விஷ்ணு

24. திரிகரணங்கள் எனப்படுபவை
1) பதி, பசு, பாசம் 2) ஆணவம், கன்மம், மாயை
3) சூரியன், சந்திரன், அக்கினி 4) மனம், வாக்கு, காயம்

25. ஐப்பசி மாத அபரபக்க சதுர்த்தியில் கொண்டாடும் பண்டிகை
1) தீபாவளி 2) புதுவருடப்பிறப்பு 3) ஆடிப்பிறப்பு 4) தைப்பொங்கல்

26. அடங்கன் முறை என்பது
1) 1- 2 வரையான திருமுறை 2) 1 - 7 வரையான திருமுறை
30 1 - 6 வரையான திருமுறை 4) 1 - 3 வரையான திருமுறை

27. சுந்தரமூர்த்தி நாயனார் அவதரித்த ஊர்
1) சீர்காழி 2) திருவாதவூர் 3) திருநாவலூர் 4) திருவாமூர்

28. மாணிக்கவாசகர் கடைப்பிடித்த மார்க்கம்
1) சற்புத்திர மார்க்கம் 2) சன்மார்க்கம் 3) சகமார்க்கம் 4) தாசமார்க்கம்

29. சம்பந்தர் இறுதியாக் பாடிய பதிகம்
1) காதலாகிக் கசிந்து 2) எண்ணுகோன் என்சொல்
3) வாழ்க அந்தணர் 4) தலைக்கு தலைமாலை

30. திலகவதியார் திருப்பணி செய்த ஆலயம்
1) திருவாரூர் திருத்தலம் 2) திருவதிகை வீரட்டானம்
3) திருமருகல் 4) திருக்கழுமலம்

31. அருணந்தி சிவாச்சாரியார் முத்தியடைந்த தினம்
1) சித்திரைச்சதயம் 2) ஐப்பசி சுவாதி 3) புரட்டாதிப் பூரம் 4) ஆவணி உத்தமம்

32. சைவசித்தாந்தத்தின் வழிநூல்
1) சிவஞானபோதம் 2) சிவஞானசித்தியார் 3) திருவருட்பயன் 4) கொடிக்கவி

33. இலங்கையில் அத்வைத வேதாந்த முன்னோடியாக விளங்கியவர்
1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 2) அருணாசலதேசிகர் 3) இராமநாதன் 4) சுவாமி விபுலானந்தர்

34. பூர்வக்கிரியைகளில் அடங்குபவை
1) திருமணம், நாமகரணம் 2) வித்தியாரம்பம், சிரார்த்தம்
3) அந்தியேட்டி - அன்னப்பிரசானம் 4) திருமணம் - சிரார்த்தம்

35. சந்திரன் வளர்வதையும் தேய்வதையும் அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுவது
1) இராசி 2) திதி 3) கரணம் 4) யோகம்

36. அங்கமும் வேதமும்......... என்ற தேவாரம் பாடப்பட்ட தலம்
1) சிதம்பரம் 2) திருமருகலும் செங்காட்டங்குடியும்
3) திருவாரூர் 4) திருவீழிமிழலை

37. சதசத்து எனப்படுவது
1) பசு 2) பாசம் 3) பதி 4) ஆணவம்

38. பெரியபுராணம் பாடுவதற்கு இறைவனால் எடுத்துக்கொடுக்கப்பட்ட முதல்அடி
1) திகடசக்கர செம்முகம்....... 2) உலகலாமுணர்ந்து......
3) முத்தைத்தரு பத்தித்திருநகை...... 4) நற்குஞ்சரக்கன்று நண்ணிற்.....

39. நாவுக்கரசர் திருக்கைலாயக் காட்சியைத் தரிசித்த தலம்
1) திருவையாறு 2) சிதம்பரம் 3) திருவாரூர் 4) திருவீரட்டானம்

40. மாணவர்களாகிய நீங்கள் உங்களிடம் வளர்த்துக்கொள்ள வேண்டிய நற்பண்புளில் ஒன்று
1) பெரியோரை அவமதித்தல்
2) ஆசிரியர்களுக்கு கீழ்படியாமை
3) தீயபழக்கவழக்கங்களுக்கு அடிமையாதல்
4) மாதா, பிதா, குரு, தெய்வத்தை போற்றி வாழ்வை மேம்படுத்தல்

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **1ஆம், 2ஆம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. 1) பஞ்சாட்சரத்தின் இரண்டு வகைகளும் எவை?
2) மகாளய பட்சகாலம் என்பதனை வரையறுக்குக.
3) சமய நூல்களின் உண்மைத் தன்மையினை நிரூபிக்க கையாளும் 3 பிரமாணங்களையும் தருக.
4) இயல்வது கரவேல் என்ற கூற்று வெளிப்படுத்தும் கருத்து யாது?
5) அக்கினித்தலம் எனச் சிறப்பிக்கப்படும் தலம் எது?
6) சிவாகமங்களின் எண்ணிக்கை யாது?
7) 12ஆம் திருமுறையில் இடம்பெறும் நூலையும் அதன் ஆசிரியர் பெயரையும் குறிப்பிடுக.
8) நால்வேதங்களும் எவை?
9) தற்போது பயன்பாட்டில் உள்ள ஆண்டுக்கணிப்பீடு எதனை அடிப்படையாகக் கொண்டது.
10) அட்ட புஸ்பங்கள் 4 தருக.

(10x 2 = 20 புள்ளிகள்)

02. பின்வரும் திருமுறைகளில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி அதன் பொழிப்புரையினையும் தருக.
அ) உற்றுமை சேர்வது......
ஆ) குனித்த புருவமும்.......
இ) மீளா அடிமை..........
ஈ) நாமார்க்கும்..........
உ) அந்தநாளனும்....... (3+2=5x2= 10 புள்ளிகள்)

03. “முப்பொருள் உண்மையினை வெளிப்படுத்துவது சைவசித்தாந்தம்”
   1) நீர் வாழும் சூழலில் ஆலயங்கள் அமைக்கப்படுவதன் நோக்கம் யாது?
   2) தியானத்தின் இரண்டு வகைகளும் எவை?
   3) அறியாமை, அறிவுடைமை பற்றி திருவள்ளுவர் குறிப்பிடும் கருத்தை விளக்குக.

(2+3+5= 10 புள்ளிகள்)

04. “மனித வாழ்வை மேன்மையுறச் செய்வன விழுமியம்”
   1) நீர் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் விழுமியப் பண்புகள் 4 தருக.
   2) நீர் குறிப்பிட்ட விழுமியப் பண்பு ஒன்றிற்கு வரைவிலக்கணம் தருக.
   3) ஈ என இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
      ஈயேன் என்னல் அதனினும் இழிந்தன்று
      என்ற குறள் மூலம் புறநானூறு வெளிப்படுத்தும் கருத்து யாது?

(2+3+5= 10 புள்ளிகள்)

05. “ஆன்ம ஈடேற்றத்திற்கான சாதனங்களில் சைவசாதனமும் ஒன்று”
   1) ஆன்மா முத்தியடையக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் 2 தருக.
   2) விபூதி அணியும் இரண்டு முறைகளையும் குறிப்பிட்டு விளக்குக.
   3) உருத்திராக்கம் பற்றிய கருத்துக்கள் 5 தருக. (2+3+5= 10 புள்ளிகள்)

06. “வேதமோடாகமம் மெய்யாம் இறைநூல்”
   1) ஆகமங்கள் சிறப்பு நூலாகக் கூறப்படுவதற்கான காரணம் யாது?
   2) சைவ, வைணவ, சாக்த ஆகமங்களின் பெயர்களைத் தருக.
   3) ஆலயம் தொடர்பாக ஆகமத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் 5 தருக. (2+3+5= 10 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றில் நீர் விரும்பிய இரண்டு பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
   அ) வேதம்
   ஆ) ஒப்புரவு
   இ) திருக்கார்த்திகை விளக்கீடு
   உ) காலக்கணிப்பு (5 x 2 = 10 புள்ளிகள்)